SCHULAMT
FÜRSTENTUM LIECHTENSTEIN

Vaduz 3. கார்த்திகை 2020 – AK/RM/ij-4253

அன்பான பெற்றோர்களே

எமது நாடு தற்போது கொவிட்-19-தொற்றுநோய் காரணமாக பொது மற்றும் தனிப்பட்ட வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் பாரிய சவால்களைச் சமாளிக்க வேண்டியுள்ளது, அதாவது ஒவ்வொன்றிலும் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பாடசாலைத் திணைக்களம் ஒருபக்கத்தில் தொடர்ந்தும் கற்பதற்கான வசதிகளுக்கு முன்னுரிமை கொடுப்பதுடன், மறுபக்கத்தில் இயன்றவரை கொரோனா-வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான சிறந்த வழிமுறைகளுடன் சேர்ந்து செயற்படுகின்றது. இதன் காரணமாக ஏற்கனவே பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை பாதுகாப்புக் கோட்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பாகவிருந்தே மாற்றியமைக்கப்பட்டது. இவ்விதமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மாற்றியமைத்தபோது அதை நீங்கள் விளங்கிக்கொண்டதற்கும் அதனுடன் நீங்கள் சேர்ந்து செயற்பட்டதற்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரித்துக்கொள்கின்றோம்!

இந்த நெருக்கடியை வெற்றிகரமாகக் கடந்துசெல்ல, தொடர்ந்தும் உங்களது சேர்ந்து இயங்கும் செயற்பாடுகளிலேயே பாடசாலைகள் தங்கியுள்ளன. ஆகவே பாடசாலை விடயங்கள் குறித்த பின்வரும் புள்ளிகளைக் கவனத்திற் கொள்ளுமாறு, நாங்கள் உங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்:

– மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு தற்சமயம் நோய் ஏற்பட்டால் கட்டாயமாக அவர்கள் வீட்டில் இருக்க வேண்டும்.
– தற்சமயம் பெற்றோரான உங்களுக்கு கொரோனா-நோய் அறிகுறி இருக்குமானால், உங்கள் பிள்ளையை மீளவும் பாடசாலை அனுப்பிவைப்பதற்கு முன்பாக, தயவுசெய்து உங்களது பரிசோதனை முடிவு வரும்வரை நிச்சயமாகக் காத்திருங்கள்.

பாடசாலைகள் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. இருப்பினும் மேலதிக நடவடிக்கையாக, அனைத்துத் தர வகுப்புகள் ஒன்றாகக் கலந்துகொள்வதை இயலுமானவரை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம், இயலுமானவரை சங்கிலித் தொடர்பான தொற்றலைக் குறைப்பது மற்றும் தொடர்பு கொண்டவர்களை இலகுவாகக் கண்டறிய முடியும் என்பதாகும்.

இந்த „வழமையான“ பாடசாலை நாட்களுக்கான அனைத்துக் கட்டுப்பாடுகளும் நிச்சயமாக இதில் சம்பந்தப்படும் அனைத்து நபர்கள் மற்றும் மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு கடினமான மற்றும் சவால்மிகுந்த பொறுமையைச் சோதிக்கும் ஒரு நிகழ்வாகும். இங்கு வசிக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் உடல்நலம் எனும்போது, இதில் அடங்கும் எமது மாணவிகள் மற்றும் மாணவர்களும், உயர்வாக முன்னுரிமை பெறுகின்றனர். நாங்கள் தேவையான அனைத்தையும் செய்து, பாதுகாப்பு நடவ டிக்கைகளைக் கடைப்பிடிக்கும் அதேவேளையில், பாடசாலைகளில் நேரடியாகப் பாடங்களை நடத்துவோம். கட்டாய பாடசாலைப் பகுதிகளுக்குள் கற்பதற்காக உள்நுழைவதற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக, மாணவிகள் மற்றும் மாணவர்கள் கற்பதற்கு வழிவகை செய்வதற்காக மற்றும் குடும்பங்கள் சிறப்பான வகையில் ஆறுதல் அடைவதற்காக பங்குனி 2020இல் பாடசாலையை மூடியது போன்று இடம்பெறுவதை இயலுமானவரை தவிர்த்துக் கொள்வோம். ஆகவே அன்பான பெற்றோர்களே, அன்பான மாணவிகளே, அன்பான மாணவர்களே, தொடர்ந்தும் இந்த தொற்றுநோய்க்கு எதிராகப் போராட, இந்த நடவடிக்கைகளை மாற்றியமைக்க, உங்கள் உதவிகள் தேவைப்படுகின்றன.

நீங்கள் நலமாக இருங்கள் மற்றும் பாதுகாப்பாக இருங்கள்!

Arnold Kind, Amtsleiter

நன்றாகக்
கைகளைக்
கழுவுதல்



கைகள்
குலுக்குவதைத்
தவிர்த்தல்



முழங்கை
மடிப்பிற்குள்
இருமுதல் மற்றும்
தும்முதல்



இடைவெளியைக்
கடைப்பிடித்தல்



பொதுபோக்குவரத்து
மற்றும் பொதுக்
கட்டிடங்களில்
உள்நுழையும்போது
முகமூடி அணிதல்



அறிகுறி உள்ளதா?
வீட்டில் இருங்கள்,
அவசரத் தொடர்பை
அழையுங்கள்
**+423 235 45 32**

